# தூது

3

★ ● ★ ● ★ பெப்ரவரி: 1984 ★ ● ★ ● ★

## பரிமாற்றம்!

ஈழத்தில் இலக்கியத்தின் பல துறையும் வளர்ந்துள்ள அளவு, விமர்சனத் துறை வளரவில்லை என்பது உண்மையே. மிகச் சொற்பளவினரே இன்று இத்துறையில் உள்ளனர். ஆனால், விமரிசனம் என்ற பெயரால் 'ஏசிக் கிழிப்பவர்கள்' பலருண்டு. இவர்களின் பார்வையில் விமர்சனம் என்றால், ஒரு நூலின் முன் அட்டையிலிருந்து பின் அட்டை வரை ஏதாவது பிழை பிடித்து கொண்டிருத்தல் என்பதே.

இவர்கள் கண்டனப் போர்வையில் விமர்சனம் செய்பவர்கள். உண்மையில் கண்டனத்துக்கும் விமர்ஸனத்திற்குமுள்ள வேறுபாட்டைப் புரியாதவர்கள்.

விமர்ஸனம் என்னும் பேரில் படைப்பாளியைத் திட்டித் தீர்க்கின்றவர்களுக்கும் குறைவில்லை. இந்த 'ஏசிக் கிழிக்கும்' பேர்வழிகளால், படைப்பிலக்கியக்காரர்கள் தம் படைப்புகளை 'நரி வாயிற் சிக்கிய கோழிக் குஞ்சை மீட்கும்' நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதனாலேயே இலக்கியக்காரர்கள் விமர்சகரைக் கண்டாலே, தூர ஓடுகிற நிலை உருவாயிற்று. 'ஆக்க இலக்கியத்தில் தோல்வி கண்டவர்களின் புகலிடம்தான் விமர்ஸனம்' என்றொரு கருத்து சிலரிடையே ஊசலாடுவதும் குறிப்பிடத்தக்கது.

விமர்ஸகன் யாரென்றால், 'ஒவ்வொரு சிறந்த வாஸகனும் ஒரு விமரிசகனே..!'

எனினும், ஈழத்தில் இத்துறை வளரவும் இளைய தலைமுறையினருக்கும், போலி விமரிஸகளுக்குமாக ஒரு விமர்சன வழிகாட்டி நூலை யாராவது எழுத முன் வருவார்களா..?

(ஆ--ர்)

---

● அன்பளிப்பு: ரூ. 1/- ●

---

### தூது

அடுத்த இதழ் ஆண்டு மலராக வெளிவரும். அதிக பக்கங்கள் கவிஞர்களிடமிருந்து கவித் தூதுகளை எதிர்பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூதே வாழி

இலக்கிய உலகின் தூதே,
இலக்கிய உள்ளங்களின்
இதயம் மகிழ, வரும் தூதே
உன் வரவால் இங்கு...
இளங்கவிகள் உருவாகிப்
புதுமை பல புரியட்டும்
சோதனை மடிந்து
சாதனை பிறக்கட்டும்!
இலக்கிய உலகில்
என்றென்றும் நீ...
இனிமையாய்ப் பவ்னி வர
என்னிதய வாழ்த்துக்கள்
எந்நாளும்...!

★ கூலமா ஏ. சமி

## சோதனைகள்.

இளைய நிலவில் உதித்த
காதல் பயணம்.
பயணத்தின் போது,
பன்னீர்த் தூத்தல்கள்
பயணத்தைத் தடுக்கின்றன
மனித மிருகங்களின்,
இடையூறுல்- பாதங்களும்
நடந்திட மறுக்கின்றன
தூரத்தே...
காகங்களின் ஆர்ப்பாட்டம்
என் காதலியின் முந்தானை
நரிக்கூட்டத்தின் வாயில்
கடைசி நேரத்தில், காதலி
கைவிடப் பார்க்கிறாள்
அத்தனையும்
ஆண்டவன் சோதனைகளே!
நானென்ன செய்ய முடியும்
கடல் மீன்களுக்கு
இரையாகலாம்...!

★ மருதூர் அப்துல் ஹஸன்

## தர்மம்

அதிபரவர்களுக்கு,
அன்பான வினவொன்று...
சமத்துவத்தின் வடிவாய்
சகலரும்
வெள்ளைச்சட்டையுடன்
கல்லூரிக்கு வரவேண்டும்
என கூறுகிறீர் இன்னும்...
கல்லூரிச் சட்டமதுவே என
கத்தவும் செய்கிறீர்
மீறும் சமயங்களில்...
'ஹைலெவ' லிலுள்ளவரின்
பிள்ளைகட்கு
பிரம்படியை குறைக்கிறீர்
ஏழைபிள்ளைகளின் கைகளில்
பிரம்பையே முறிக்கிறீர்
பரீட்சையில் கூட...
அவர்களுக்கு கூடிய புள்ளி
இவர்களுக்கு வட்டம்
ஏனிந்த இனங்காணல்...?
அவரின் வெள்ளையாடையின்
'அயன்' குலையா தன்மையும்
இவரின் ஆடையில்
இறுகிக் கிடக்கும்
பழுப்பு நிறம் பார்த்துமா...?

★ கல்முனை ஜிப்ரியா ஷெரீப்

## படைக்காதே.

ஓ... பிரம்மா...!
என்னை ஏன் படைத்தாய்?
துன்பக் கருவறையில்
நானிருந்து
புழுவாய் துடிப்பதை
காணலையோ...?
இந்த நிலை தினமுமா...
ஐயையோ வேண்டாம்
மானிட ஜன்மமே
சலித்துப் போச்சு இனியும்
என்னைப் படைக்காதே...

★ பாண்டியூர் நாகா

## தாய்மை மலர

★ பாவலர் பஸில் காரியப்பர்

கரைவாகு வட்டை நெற்
கதிர்போல என்மடியை
நிறைவூட்டும் பிள்ளைமுகம்
நீதருவாய் ஆண்டவனே!

அறுகம்பைக் காட்டிற்கோர்
ஆளனுப்பி தேன்கொணர்ந்து
இருப்புப்பால் வைத்தே நான்
இன்புறுவதெக் காலம்?

கூரைப்பிடவை தன்னை
கோலியே தொலிட்டோர்
ஆராரோப் பாட்டிசைத்தே
ஆனந்தங் காண்பதென்றோ?

பொன்னல் 'அரைமூடி'யை
போட்டே அரைஞாணிவிட
பெண்ணடி யொன் றென்
வயிற்றில்
பெற்றுவிட மாட்டேனோ..

பாத்திமாவின் நாற்பதன்று
பாய் கழுவி நீராடிக்
காத்தாங்குடிப் பிடவை
கட்டி மகிழ்வதென்றோ......

காதுகுத்துக் கல்யாணம்
காணவந்த பெண்டுகளே
வாதுக்குக் குரவையிட்டென்
வசை தீர்ப்பதெக்காலம்?

பள்ளவளிக் காலையிலே
பால்கறந்து கொண்டுவந்தே
பிள்ளைக்குத் தமிழ் சேர்த்து
புகட்டுவதும் எக்காலம்

பிள்ளைக் கிளி மொழியைப்
பிழிந்தே செவி பருகக்
கல்லோயாப் பள்ளக்
கரும்பு தின்றாற்போலிருக்கும்

● மறுபிரசுரக் கவிதை - 3

மட்டுநகர் வாவியிலே
மகிழ்ந்திசைக்கும் மீனினங்க
வெட்கிடவே என் மகளின்
விழியழகைக் காணேனோ...

மாவால் ஆராத்தி செய்து
மகளுக்கு கண்ணூறும்
நாலூறும் நான் கழிக்கும்
நாள் வருவதெக் காலம்...

எட்டிப் பிடித்துள்ளே
இருந்து பழக ஓலைப்
பெட்டி இழைத்து நிறப்
பூப்போட மாட்டேனோ...

குஞ்சுபிடிமாங்காய்சதங்கை
கோத்துவெள்ளிஞாணிலிட்டு
பிஞ்சுமகன் தத்தி நடை
போட்டு வரக் காணேனோ...

கற்பன் பாய்க் கட்டினிலே
காலிடறச் சாய்ந்ததினால்
புற்பன் தட் டுள்ளிருந்த
பொரி சிதறல் எக்காலம்...

மருதமுனைச் சாறன் ஒன்றை
மடித்தே உடுப் பாட்டி
வரிசை முகம்மதுக்கோர்
வார் அணிவ தெக்காலம்...

ஆட்களொடு பார்க்க வந்த
அக்கரைப் பற்று ராத்தா
நாட்டுக் கவி யிசைத்தே
வாழ்த்து சொல்வதெப்போ

சவளக் கடை அரிசி
ஆலைப் புகை போககி
கவலை மிகுந்த மனக்
கருவலினை கககுவதோ ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைச் சேனைக் கனுப்பும்
வக்கோலாய் பிறந்திருந்தால்
பாழும் உடம்பாலிந்தப்
பார் பயணைக் கண்டிருக்கும்

சம்மாந் துறை அரிசை
சாத்தி வைத்த பல்லொளிர
'உம்மா' வெனக் கூவும்
உயிர் பிறப்ப தெக்காலம்...

★ நன்றி: அகில இலங்கை
தமிழ்மொழித் தின விழாச்
சிறப்பு மலர் - 1973.

## நிலவும் நாய்களும்.

உள்ளதைச் சொன்னால்
உடலெங்கும் புண்ணாகும்
நல்லது எதுவென்று
நாய்க்குத் தெரியாது!
நடு ஆற்றில் விட்டாலும்
நக்கித்தான் உண்ணும்

அதன் -
கூடப் பிறந்த குணம்
குழிவரைக்கும் போவதுண்டு

நாய்க்கு நிலவின் மீது
ஏன் கோபம்...?
அதன் ஒளியில்
மறைந்து நின்று
மற்றவரைக் கடிப்ப தற்கு
இயலாதென்ற
ஆதங்கம் அதனாலா...?
அன்றி -
தன்னைப் பெரிதென்று
தரணியிலே நினைத்ததுவா?
நிலவை 'நையாண்டி'
பண்ணிப் பார்க்கிறதே...

நிலவுக்கென்ன...
நாய்கள் குரைக்கட்டும்!

★ கல்முனை ஆதம்

## தூது

ஒரு மடல் பறவையின்
காக்கிச் செட்டைகளுள்
என் இதயத்தை
அனுப்பினேன்...
ஏற்றுக்கொண்டாயா?
எழுத்து மணிகளைக்
கோர்த்து ஒரு...
கவி மாலையாக்கி
தூது விட்டேன்
பெற்றுக் கொண்டாயா?

மைல் கற்கள் தான்
நம்மைப் பிரிக்கின்றன
மனங்களை அல்ல.

என்
இமைக் குடைகளை
விரித்து
வீதியில் வைத்திருக்கிறேன்.
உன் வரவு எங்கே...?

★ நஸீரு லாபிர்

## சொந்தம்

வாழ்க்கை நடத்த
வரும்படி போதாதென
அன்புக் கணவனை
அயல் நாடு அனுப்பினேன்.
வெளிநாட்டு பணமும்
வெகுமதிப் பொருட்களும்,
மாதந்தோறும்... எனக்கு
வந்து குவிகின்றன
அவை அனைத்தும்
எனக்குச் சொந்தம்
ஆனால்... அவரின்
அன்புள்ளம் மட்டும்
எனக்கின்று சொந்தமில்லை.
அது... அங்குள்ள ஓர்
அழகிக்கே சொந்தமாம்.

★ தம்பிலுவில் ஜெகா

## ஓடு

ஹே, மனிதா...!
அதோ அறியாமை அரக்கன்
கெட்டு வாளுடன்
உனைத் துரத்தி வருகிறான்
நீ, வெறுங்கரத்தோடு
சூன்யத்தைப் பார்த்தபடி
இங்கே நிற்காதே... ஓடு
உன்னையும் உலகையும்
காத்துக் கொள்ள
அறிவுக் கேடயத்தை
தேடி நீ... ஓடு...!

★ எம். ஏ. ரஹீமா

## வாதங்கள்

மணக்கோலத்தில்
பாதி விழி மூடி நீ...
மோனத்தவம் புரிகிறாய்
உன் மலர் வதனத்தை
மனங்குளிரக் காணும்
வாய்ப்பினை இழந்ததனால்
இங்கு... என் விழிகள்
நீர்க் கோலமிடுகின்றன...
சீதன (ப்பிரதி) உபகாரம்
எண்ணாது, அன்று..
ஒரு அபலைக்கு
வாழ்வளித்தவன் நான்
தங்கை உனக்கும்
சீர்வரிசை எண்ணாது
வாழ்வுதர, ஒருவன்
மணமாலையேந்துகிறான்
உன்னை வாழ்வித்தவன்
பெருமனம் படைத்தவனும்
ஆனால், நான்...?
பெருந்தீமை இழைத்தவனா?
உன் (என்) பெற்றோரின்
உயிரற்ற வாதமிது
ஹ்ம்..! ஞாயம் எதுவென்று
ஞாலம் அறியும்...!

★ கட்டுகொட மஸீதாஹூம்ஸா

## சுற்றம் சூழ வந்திருந்து...

அவனது
சுவாசக் கரத்திலிருந்த
ஜீவித அப்பத்தை
காலக் காகம்
பறித்துப் பறந்தது.
சுற்றி நின்றவர்கள் - தம்
கையிலிருந்த அப்பத்தை
சர்வமாய் எண்ணினர்
மீண்டும் அந்தப் பறவை
மின்னலாய் வரக் கூடுமென
சிந்தனை தட்டால்
காவல் செய்தனர்...
சிந்தனைத் தட்டுக்கு
அப்பத்தின் சூடு
தத்துவ உஷ்ணம் தந்தது
பின்னர்......
கைச்சூடு மெய்ச் சூடாச்சு!
பயப் பசிக்கு... பாதிப்பேர்
இறையருள் நீர் வேண்டி -
பிரார்த்தனைக் கரம் ஏந்த...
மீதிப்பேருக்கு -
காகத்தின் நினைவு...
'டெலிவிஷன் என்டனாவில்
தொங்கி ஆடும்
கறுப்பு ரிப்பனாச்சு...!'

★ பாத்திமா மைந்தன்

## உண்மை

பொய்யுரைத்து
ஏட்டை அசுத்தப்படுத்தும்
அரசியல்வாதி
மதிக்கப்படுகிறான்
மெய்யுருக்கி - நாட்டை
விருத்திசெய் தொளிலாழி
நசுக்கப்படுகிறான்

★ நற்பிட்டிமுனை பளீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன மாற்றம்

நாங்கள் உழைக்கும் போது
எங்கள் உதிரம் வியர்வையாகிறது...!
எங்கள் உழைப்பினை
அவர்கள் உறுஞ்சும் போது
எங்கள் வியர்வை
அவர்களுக்கு உதிரமாகிறது ...

★ மூருகு

# காதோரம்!

நாடளாவிய ரீதியில் கையெழுத்துப் பத்திரிகைகள் பிரபல்யமாவதில்லை. நமது நாட்டைப் பொறுத்த வரையில், பத்திரிகைகளில் வாய்ப்புக் கிடைக்காத இளம் எழுத்தாளர்கள் கை. எ. பத்திரிகையை ஆரம்பிக்கின்றனர் அவர்களது இம்முயற்சிக்கு ஆதரவளிப்பது தமிழ் பத்திரிகைகளின் பணியாகும்.

எந்த ஒரு பத்திரிகையும் இம்முயற்சிக்கு ஆதரவளிக்கவில்லை. ஆனால், தமிழகத்தில் 'சாவி' வார இதழும் ஈழத்தில் 'தினபதி'யுமே ஆதரவளித்தன.

தினபதி, 1980-ல் பாடசாலை, மன்றங்கள் ரீதியில் கையெழுத்துப் பத்திரிகைப்போட்டி ஒன்றை நடாத்தியதெனினும், அதன்முடிவுகள் இன்னும் வெளிடப்படாததன் மர்மம் என்ன?

முடிவுகளை உடன் வெளியிட்டு இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தல் தினபதியின் நற்பெயரை பாதுகாப்பதாய் அமையும்!

-எம். ஆர். கமன்

## வடு

நெளிந்தலையும்
கடலலை போல்
நினைவலைகள் மிதக்கையிலே
விழி நதிகளிலிருந்து
நிர் வழிந்தது
அன்று
அன்புடன் ஒருமித்து
தன் மானம் காத்து நின்றோம்
இன்றோ ..
மானம் இழந்து
மதிப்பழிந்தோம்
உடமைகள் பறி போய்
உள்ளங்கள் உடைந்தன
'அகதிகள்' பட்டத்துடன்
அணுவணுவாய் சாகிறோம்
நெஞ்சிலிட்ட நெருப்பு வடு
என்றுமே மாறாது
ஏங்கியே மடிகிறோம் ..

★ அஷ்ரபா நூர்டீன்

## 00 தூது

'இலக்கியத் தூதே,
இலட்சியத் தூது!'

ஆசிரியர்:
ஆர். எம். நௌஸாத்.

நிர்வாக ஆசிரியர்:
எஸ். எம் எம். ரூபீக்.

அலுவல்கள்:
503, பிரதான வீதி
சாய்ந்தமருது - 1

இப்பத்திரிகை 'அல் ஹஸீரு அச்சுச் சாதனங்களால் கல்முனை பைன்ஆர்ட் அச்சகத்துல் அழுத்த் வெளியிடுபவர் கல்முனை அபூ

வெளியீடு: கல்முனை புதுமை கலை இலக்கிய வட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org